செய்தி வெளியீடு எண்:428

# கூட்டுறவு தேர்தல்கள்

# முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

# 11–7–2007

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் எந்த நிலையில் இருந்த போதும், கூட்டுறவு அமைப்புகள் என்பவை ஒரு நல்ல நோக்கத்தோடு கட்சி அடிப்படையில் இல்லாமல், மக்களின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு நடைபெற வேண்டியவை என்ற கருத்தோடு, ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டு வந்தது. இப்பொழுதும் அதே நோக்கத்தோடு தான் கூட்டுறவு அமைப்புகளின் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்று விரும்பி, அதற்கான அறிவிப்பைச் செய்தது. இடையில் பல ஆண்டுக் காலம் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெறாமல் அதிகாரிகளின் ஆளுகையின் கீழ் கூட்டுறவு அமைப்புகள் கொண்டுவரப்பட்டன. இந்த நிலையை மாற்றி தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, மீண்டும் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்று முயற்சியெடுத்து, அதை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும், அதன் ஆதரவுக் கட்சிகளும் இந்தக் கூட்டுறவு தேர்தலில் பங்கு பெற முடியாதென்று புறக்கணித்து விட்டன. அதற்குக் காரணம், எதிர்க்கட்சிகள் வைத்த கோரிக்கையான, புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பதை சட்டப்படி நிறைவேற்ற முடியாத சூழ்நிலை தான். கூட்டுறவு அமைப்புகளுக்கான புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் தான் சேர்க்க வேண்டும் என்ற நீதிமன்ற ஆணையின்படி செயல்பட வேண்டியிருந்ததால் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க இயலாது போயிற்று.

ஆயினும் நடைபெற்ற கூட்டுறவு அமைப்புகளின் தேர்தல்களில் பல இடங்களில் பதவிப் பொறுப்புக்கு வருவதில் ஏற்பட்டுள்ள போட்டிகளில்

விரும்பத் தகாத சில சம்பவங்கள் ஆங்காங்கு நடைபெற்று – வெளியூரிலிருந்த நான் அதனைக் கேள்விப்பட்டு தோழமைக் கட்சிகளோடு தொடர்பு கொண்டு தேர்தலை சுமூகமாக நடத்த வேண்டுமென்று தலைமைக் கழக நிர்வாகிகளிடமும், மாவட்டக் கழக நிர்வாகிகளிடமும் கேட்டுக் கொண்டும்கூட, அவர்கள் எடுத்த முயற்சிகள் முழு வெற்றி அடையாமல் ஆங்காங்கு சில கசப்பான நிகழ்ச்சிகள் உருவாகி விட்டன என்பதைக் காணும்பொழுதும் கேட்கும்பொழுதும் எந்தக் குறிக்கோளுக்காக கூட்டுறவு அமைப்புகளின் தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கருதினேனோ, அதற்கு மாறாக ஆங்காங்கு தோழமை உணர்வு குலைந்து பகையுணர்ச்சி தலையெடுக்கத் தொடங்கியிருப்பது கூட்டுறவு அமைப்புகளின் நோக்கத்திற்கே விரோத மானதாக இருப்பதை உணர முடிகின்றது.

ஆகவே கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தை உண்மையாக உணர்ந்து செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த அடிப்படையில் இந்தத் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென்று கருதுவதால்,

இதுவரை நடைபெற்றுள்ள மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள கூட்டுறவு அமைப்புகளின் அனைத்துத் தேர்தல்களையும் ரத்து செய்து விட்டு,

புதிதாக எல்லா அமைப்புகளின் தேர்தல்களையும் எந்த முறையில் நடத்துவது என்பதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொள்வதற்கு – சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனை களையும் பெற்று,

அதன் பின்னர் புதிய தேதிகள் அறிவிக்கப்பட்டு முறைப்படி அனைத்துக் கூட்டுறவு தேர்தல்களும் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.